III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.569/2021

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 16-08-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Parameshwari | Village | : |
| Husband Name | : Santhanam | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து தவிர எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. மயிலாப்பூரில் நான் குடியிருந்து வரும் வீடு எனக்கு சொந்தமானது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமான நிருபன வாக்குமூலம் என்ன என்று எனக்க தெரியாது. மாருதி பேப்பர் கன்வர்ட்டர் என்ற கம்பெனி என்ன கம்பெனி என்று எனக்கு தெரியாது. பெயர் மட்டும் தெரியும். அந்த கம்பெனி திருமணத்திற்கான அழைப்பிதழ் அட்டைகள் தயார் செய்யும் கம்பெனி என்று சொல்வார்கள். அந்த கம்பெனியை எனது மகன் மற்றும் பேரன் நடத்தி வருகிறார்கள். அந்த கம்பெனி சார்பாக **standard chartered bank** ல் ஒரு கடன் திரும்ப செலுத்த முடியாத நிலையில் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த கடனை செலுத்துவதற்கு நான் வழக்கு கடனை வாங்கியதாக எனது நிருபண வாக்குமூலத்திலும் வழக்குரையிலும் சொல்லியுள்ளது உண்மையில்லை அது எனக்கு தெரியாது. **standard chartered bank** ல் வாங்கிய கடனை பிரதிவாதியிடமிருந்து பெற்ற கடனை வைத்து அடைக்கப்பட்டுவிட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அம்பத்துார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் நான் எனது பேரனுடன் சமரசம் ஏதும் செய்து கொண்டேனா என்றால் இல்லை. மற்ற தரப்பினர்களுடனம் நான் நீதிமன்றத்தில் சமரசம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. அம்பத்துார் நீதிமன்றத்தில் நடைபெற்ற தீர்ப்பின் மீது மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எனக்கு அது பற்றி தெரியாது. அம்பத்துார் நீதிமன்றத்திற்கு நான் சென்று எனது தரப்பு வாதத்தை முன்வைத்தேன். இந்த வழக்கு எந்த வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்பது எனக்கு ஞாபகமில்லை. காலம் கடந்து தாக்கல் செய்ததற்கான காரணம் எனக்கு உடல்நிலை சரியில்லை. அறுவை சிகிச்சை , செய்யப்பட்டிருந்தது. **2014** ல்

அம்பத்துார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு சம்மந்தமாக அந்நீதிமன்றத்திற்கு நான் சென்று வந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து இன்றைக்கு தேதியில் வேறு ஒருவருக்கு கைமாறிவிட்டது என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். அது சம்மந்தமாக நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அந்த விவரத்தை நான் எனது மகன் மற்றும் பேரனிடம் சொல்லிவிட்டேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே நான் வேறு மூன்று வழக்குகளில் சமரசம் செய்துவிட்டு அதன் பேரில் ஏற்பட்ட தீர்ப்புகளை மறைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த மூன்று வழக்குகள் சம்மந்தமான விவரங்களை நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்பது எனக்கு தெரியாது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள கடன் சம்மந்தமான கணக்கு வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது மகனுக்கும் எனது பேரனுக்கும் தெரியும். எனது பேரன் அடமானம் சம்மந்தமாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதியிடமிருந்து கடன் பெற்று அதை வைத்து **standard chartered bank**ல் பெற்ற கடனை அடைத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கடன் அடைப்பு ஏற்பாடும் எனது வேண்டுகோளின் பேரில் தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. இவற்றையெல்லாம் மறைத்து நான் இந்த வழக்கை பொய்யான சங்கதிகள் கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் எந்த பரிகாரமும் சட்டப்படி எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆதலால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த நாளன்று எனக்கு வழக்கு சொத்தில் எவ்வுரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.